**<u>மார்கழித் திருவிழா</u>**

மார்கழித் திருவிழா கொண்டாட்டத்தை முன்னிட்டு 3ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை மாணவர்களுக்கு 'நமச்சிவாய பதிகம்' ஒப்புவித்தல் போட்டியும் 9ஆம் வகுப்பு மாணவர்களுக்கு 'புராணக் கதையினைக் கூறுதல்' போட்டியும் நடைபெற்றது. எல்.கே.ஜி. (பாலர் வகுப்பு) முதல் 2ஆம் வகுப்பு வரையுள்ள குழந்தைகள் மார்கழி மாதத்தின் சிறப்புகளைத் தமிழாசிரியப் பெருமக்கள் வழிநின்று அறிந்து கொண்டனர். மாணவர்கள், 3ஆம் முதல் 5ஆம் வகுப்பு வரை மார்கழி மாதத்தின் சிறப்புகளையும் 6ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை சமயக்குரவர்கள் நால்வர் பற்றியும் பயிற்சித்தாள் எழுதினர். 8ஆம் வகுப்பு மாணவர்களால் கதாகாலட்சேபம் நிகழ்த்தப்பட்டது. 6ஆம் வகுப்பிற்கு 'கோலம் வரைந்து வண்ணம் தீட்டுதல்' என்ற தலைப்பிலும் 7ஆம் வகுப்பிற்கு 'பாசுரம் எழுதி அலங்கரித்தல்' என்ற தலைப்பிலும் 8ஆம் வகுப்பிற்கு 'வண்ணமலர் தொடுத்தல்' என்ற தலைப்பிலும் பயிலரங்கம் நடைபெற்றது.